முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

M.A.C.O.P. No. 301/2023

2025–ம் வருடம் ஜூலை மாதம் 07–ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873–ம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

பெயர்: திருமதி.திருமாயி அம்மாள் (ம.சா.1) தொழில்:

த/பெ: இனம்:

கிராமம்: வயது:

மாவட்டம்: நாள்: 07–07–2025

முதல் விசாரணை:

சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையவை தான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது.

| வ. எண். | தேதி | ஆவணம் | ஆவணத் தன்மை | குறியீட்டு எண் |
|---|---|---|---|---|
| 1 | --- | குற்ற எண்.401/2023 முதல் தகவல் அறிக்கை | இணைய நகல் | ம.சா.ஆ.1 |
| 2 | --- | TN 57 AZ 9570 வாகன பதிவு சான்று | இணைய நகல் | ம.சா.ஆ.2 |
| 3 | --- | TN 57 AZ 9570 வாகன காப்பீட்டு சான்று | இணைய நகல் | ம.சா.ஆ.3 |
| 4 | 01.09.2023 | விபத்து பதிவேடு | இணைய நகல் | ம.சா.ஆ.4 |
| 5 | --- | காயச்சான்று | இணைய நகல் | ம.சா.ஆ.5 |
| 6 | --- | ஸ்கேன் ரிப்போர்ட் (2) | அசல் | ம.சா.ஆ.6 |
| 7 | --- | டிஸ்சார்ஜ் சம்மரிகள் (2) | அசல் | ம.சா.ஆ.7 |
| 8 | --- | மருந்து மற்றும் மருத்துவ பில்கள் (3) | அசல் | ம.சா.ஆ.8 |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | --- | மாதிரி வரைபடம் | இணைய நகல் | ம.சா.ஆ.9 |
| 10 | --- | குற்ற எண்.401/2023க்கான இறுதி அறிக்கை | இணைய நகல் | ம.சா.ஆ.10 |
| 11 | --- | மனுதாரரின் ஆதார் அட்டை | ஒப்பிட்டு நகல் | ம.சா.ஆ.11 |
| 12 | --- | மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் (முதல் பக்கம்) | ஒப்பிட்டு நகல் | ம.சா.ஆ.12 |
| 13 | --- | PAN Card | ஒப்பிட்டு நகல் | ம.சா.ஆ.13 |

மனுப்படி உத்தரவாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Disability Certificate Ex. C.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் விபரங்கள் தெரியும் என்றால் சரிதான். 04.09.2023ம் தேதி சி.எப்.மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.7ன் 2வது டிஸ்சார்ஜ் சம்மரியில் செல்லும் பேருந்தில் கீழே விழுந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 02.09.2023ல் எடுக்கப்பட்ட ஸ்கேன் ரிப்போர்ட்டின்படி குறைபாடுகள் உள்ளதாக துலங்கவில்லை என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய கவனக்குறைவால்தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. 08.09.2023ற்கு பின்னர் தொடர்சிகிச்சை எடுத்ததாக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனக்கு 86 வயது என்றும், எனவே வெங்காய வியாபாரம் செய்து மாதம் ரூ. 20 ஆயிரம் வருமானம் ஈட்டி வந்தேன் என்று சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. விபத்தில் சம்பந்தபட்ட மினிபஸ் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், எனவே 2ம் எதிர்மனுதாரர் தற்போது உள்ள சட்டப்படி இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல.

2. மோட்டார் வாகன ஆய்வறிக்கையை தாக்க்ல செய்தால் மேற்படி மினிபஸ் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பது தெரியவரும் என்பதால்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டதாலும், மினிபஸ் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதாலும் 2ம் எதிர்மனுதாரர் பொறுப்பாக மாட்டார் என்றும், ஏதேனும் இழப்பீடு வழங்கினாலும் அதை 1ம் எதிர்மனுதாரர் தான் கொடுக்கக்கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. Disability Certificateல் ஊனம் மிகைப்படுத்தி காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

ஒம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.